முச்சந்தி முரளி



"இனி வீட்டில ஜன்னல் கம்பியாவது மிஞ்சுமோ எண்டது சந்தேகம் தான் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 317

செவ்வாய்க்கிழமை
08 ஒக்ரோபர் 2024

புரட்
வள்ளுவ

*தமிழரசை விட்டு வெளியேறி*

## சங்குச் சின்னத்தில் சசிகலா போட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 8
ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.
11


# தமிழரசின் தலைமை; விலகுகிறார் மாவை!



**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 8**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவதற்கு மாவை சோ.சேனாதிராஜா தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.**
11

## வீதி அபிவிருத்தி சபையின் தலைவராகத் தமிழர்!



கொழும்பு, ஒக். 8
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் மூத்த பொறியியலாளருமான தர்மலிங்கம் பாஸ்கரன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.
அமைச்சர் விஜித ஹேரத்தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
தர்மலிங்கம் பாஸ்கரன் யாழ்ப்பாணம்
11

## உலக வங்கியால் 200 மில். டொலர்

கொழும்பு, ஒக். 8
இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அதற்கு அமைவான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இலங்கை அரசாங்
11

*வடமராட்சி வடக்கு*

## பிரதேச செயலகத்தில் நேற்று மின் ஒழுக்கு!

*உத்தியோகத்தர்கள் அருந்தப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 8
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் மின் ஒழுக்கால் ஏற்பட்ட தீ பரவல், துரித செயற்பாட்டின் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.
11

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவி விலகினார்!

கொழும்பு, ஒக். 8
இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் நேற்றுக் கையளித்துள்ளார்.
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தை நியமித்தமை தொடர்பில் உச்ச நீதி
11

## கட்டுமரம் கவிழ்ந்து மீனவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 8
பருத்தித்துறை - தும்பளை கடற்பரப்பில் கட்டுமரம் ஒன்று கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
தும்பளை, லூர்த்துமாதா கோவிலடியைச் சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது-69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சடலம் சக மீனவர்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
கரவெட்டி திடீர்
11



## வடக்கின் சுற்றுலாவை மேம்படுத்த உதவிகள்

*ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்*

கொழும்பு, ஒக். 8
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டகபூமி
11

## தாமரைக் கோபுரத்திலிருந்து வீழ்ந்து மாணவி உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 8
கொழும்பு, தாமரைக் கோபுரத்தில் இருந்து கீழே வீழ்ந்து மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
11

## சி.ஐ.டி. பணிப்பாளர் பதவிக்கு பெண் அதிகாரி முன்மொழிவு!



கொழும்பு, ஒக். 8
இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதல் தடவையாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்குப் பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகத் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால என்ற
11

## பணமோசடியில் ஈடுபட்டமைக்காக மரண விசாரணை அதிகாரி கைது

யாழ்ப்பாணம், ஒக். 8
பிரான்ஸுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, பணமோசடியில் ஈடுபட்ட மரண விசாரணை அதிகாரியொருவர் பருத்தித்துறையில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
15 இலட்சம் ரூபா மோசடி செய்தார் என்று அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற
11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களின் விடியலுக்கு ஒற்றுமையே களம் அமைக்கும்

## மாவீரர்கள் போராளிகள் குடும்பநலக் காப்பகம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 8

**தமிழ் மக்களுக்கான உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சிங்கள பெரும்பான்மைக்குள் கரைந்து போகாமல் தங்கள் தனித்துவத்துடன் ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்து களத்தை ஏற்படுத்தவேண்டியது கட்சிகளினதும் அரசியல் பிரமுகர்களினதும் தலையாய கடமையாகும்.**

-இவ்வாறு தமிழ்க் கட்சிகளிடம் மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலக் காப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

எமது நான்கு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளர்களுக்கும் எமது அமைப்பானது ஆதரவு வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கும்.

முழுநாட்டிலும் மாற்றத்தை எதிர்பார்க்கின்ற மக்கள் இருக்கின்ற போதிலும் தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மைக்குள் கரைந்து போகாமல் தங்கள் தனித்துவத்துடன் ஒற்றுமையாக ஒருசேர நின்று மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான எந்த முன்னெடுப்பும் திம்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தாயகம், தேசியம், சுயநிர்ணயம் உள்ளடங்கலான இறுதித் தீர்வை எட்டும் நோக்குடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

இன அழிப்புக்கு பரிகார நீதியைப் பெறும் நோக்குடன் சர்வதேச நீதிக்கான பொறிமுறை உள்ளடக்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினைப் பெறும் நோக்குடன் சிங்கள அரசாங்கத்தோடு தமிழர் தரப்பால் முன்னெடுக்கப்படும். எந்தவொரு பேச்சுவார்த்தையிலும், ஏற்றுக் கொள்ளக்கூடிய மூன்றாம் தரப்பு நாடு ஒன்றின் நடுநிலையுடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பழைய அரசியல் பிரமுகர்கள் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட்டு சமூகப் பொறுப்புள்ள அறிவார்ந்த வேட்பாளர்களாக முன்னிறுத்தப்படுவது எம் இனத்தின் எதிர்காலத்துக்கு தவிர்க்கப்படமுடியாத தேவையாக உள்ளது. அத்தோடு இதில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் ஆண்களுக்கு நிகராக 50 வீதம் வழங்கப்படவேண்டும் என்பதும் முக்கியமாக கொள்ளப்பட வேண்டும் - என்றுள்ளது. (சு-45-20)


## சிறிரெலோ கட்சி தனித்துக் களம்

யாழ்ப்பாணம், ஒக். 8

வன்னித் தேர்தல் தொகுதியில் சிறிரெலோ கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். அத்தகையதொரு அரசியல் புரட்சியை தமிழ் மக்களும் விரும்புகிறார்கள்.

அந்தவகையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறிரெலோ கட்சி ஜனநாயக தேசியக் கூட்டணிக் கட்சியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (சு-18)




## சிக்கவுள்ளனர் வரி ஏய்ப்போர்

யாழ்ப்பாணம், ஒக். 8

வரி ஏய்ப்புச் செய்து வரும் முதலைகளின் வங்கிக்கணக்குகளை முடக்குவதற்கு உள்நாட்டு இறைவரித்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நூறு பில்லியனுக்கு மேல் வரி நிலுவையாக உள்ள நிறுவனங்களுக்கு இம்மாதம் 25 ஆம் திகதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. 300 பில்லியனுக்கு மேல் வரி நிலுவையாக உள்ள நிறுவனங்களுக்கு டிசெம்பர் 25 ஆம் திகதிவரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பலர் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிப்பதில்லை, கடிதங்களுக்கும் பதிலளிப்பதில்லை, கூட்டங்களுக்கு வருவதில்லை. இவர்களின் வரி நிலுவையை பெற்றால் 2024 ஆம் ஆண்டுக்கான வரி வருமான இலக்கை எட்ட முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (சு-6)

## முன்னணி வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 8

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக யாழ். - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பமிட்டுள்ளனர்.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 122 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை கட்டுப்பணம்

கொழும்பு, ஒக். 8

2024ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலுக்காக 122 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாத்திரம் 36 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

## யாழில் முன்னணி நேற்று வேட்புமனு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்தது. வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னதாக நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மலர்மாலை அணிவித்து, மலர்தூபி அஞ்சலி செலுத்தினர். அகில இலங்கைதமிழ்க்காங்கிரஸ்கட்சியில் 'சைக்கிள்' சின்னத்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவுள்ளது. (எ-20)

LANKA Sathosa

## சதொசவுக்கு புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஒக். 8

லங்கா சதொச நிறுவனத்தின் புதிய தலைவராக கலாநிதி சமித்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 4ஆம் திகதி தனது பதவியைப் பொறுப்பேற்றார்.

வர்த்தக வாணிபத்துறை, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஈ.பி.டி.பி. கட்சி வேட்புமனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.8

ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஈ.பி.டி.பி. நேற்றுத் தாக்கல் செய்தது. கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும், கிழக்கில் 3 மாவட்டங்களிலும், கொழும்பிலும் வீணைச் சின்னத்தில் ஈ.பி.டி.பி. கட்சி போட்டியிடும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (எ-27-20)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் நான்காம் ஆண்டு கலை வரலாற்றைக் கற்கும் மாணவியான முகம்மது சலீன் பாத்திமா சிபாயா என்பவரால் கற்கையின் ஒருபகுதியாக எடுத்தாளுகை செய்யப்படும் 'முரண்பாடு பற்றிய பார்வை: யுத்தம் பற்றிய மூன்று கமராக்கள்' எனும் தலைப்பில் வடமாகாணத்தைச் சேர்ந்த திறமையான இளம் புகைப்படக்கலைஞர்களின் புகைப்படங்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் இலவசமாகப் பங்குபெற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தூதரக நியமனங்களை மீள் பரிசீலிக்கும் அரசு

கொழும்பு, ஒக்.8

**வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.**

தூதரக நியமனங்களில் உறவினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றும் முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க அரசியல் குடும்பங்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களின் நியமனங்களை அமைச்சகம் மதிப்பாய்வு செய்து வருகிறது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மதிய உணவு வழங்கலில் சிக்கல் ஆராய்கின்றது கல்வி அமைச்சு

கொழும்பு, ஒக்.8

பாடசாலைகளில் மதிய உணவு வழங்குநர்களுக்கு முறையாகப் பணம் வழங்காத வலயக் கல்வி அலுவலகங்கள் தொடர்பான தகவல்களை அறிய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மதிய உணவுத் திட்டத்துக்குத் தேவையான அனைத்துப் பணமும் மாகாணங்களுக்கு அனுப்பப்பட்ட போதும், வலயக் கல்வி அலுவலகங்கள் உணவு வழங்குநர்களுக்கு பணம் செலுத்தவில்லை எனக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் இருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று கூறப்படுகின்றது. மேல் மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகள் இரண்டு மாதங்களாக நிதி வழங்கப்படவில்லை என்று கூறி மதிய உணவு வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளன என்றும், நிதி கிடைக்கும் வரையில் உணவு வழங்கமுடியாது என்று வழங்குநர்கள் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## 307 பொலிஸாருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஒக்.8

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்து நாடு முழுவதும் உள்ள பல்வேறு பொலிஸ் பிரிவுகளுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 307 பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின்படி தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலின் கீழ் இந்த இடமாற்றங்கள் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் தற்காலிகமாக கடமையாற்றிய 24 பொலிஸாரின் இடமாற்ற உத்தரவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்கள் கைது

நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்கள் 40 பேர் ஹங்வெல்ல மற்றும் கம்பஹா பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், தனியார் விடுதி ஒன்றில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சமூக வலைத்தளங்கள் ஊடாக இவர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டு வந்தமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களில் சீனாவைச் சேர்ந்த 29 ஆண்களும், ஒரு பெண்ணும் இந்தியாவைச் சேர்ந்த 3 பெண்களும் ஓர் ஆணும், தாய்லாந்தைச் சேர்ந்த 2 ஆண்களும், 4 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து 499 கையடக்கத் தொலைபேசிகளும், 25 மடிக்கணினிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## சிறு முறைப்பாடுகளுக்கு இரு வாரங்களில் தீர்வு

கொழும்பு, ஒக்.8

பொதுமக்களால் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு முறைப்பாடுகள் அனைத்தையும் இரு வாரங்களில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணித்துள்ளார். இதுதொடர்பான பணிப்புரை அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (எ-இ)

## பொதுமக்களின் கரிசனையுடன் மின்சார மறுசீரமைப்புச் சட்டம்

கொழும்பு, ஒக்.8

புதிய மின்சாரச் சட்டத்தில் மறுசீரமைப்புகள் பொதுமக்களின் கரிசனையுடனே நிறைவேற்றப்படும் என மின்சாரசபை பணிப்பாளர் புபுது நிரோஷன் ஹெதியால்கே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நடைமுறையிலுள்ள மின்சார சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதா அப்படியே நடைமுறைப்படுத்துவதா என புதிய அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையையும் அரசாங்கம் கோரியுள்ளது.

மக்கள் மையப்பட்ட மின்சார நிர்வாகத்தை உருவாக்குவதே அரசின் திட்டம் - என்றார். (எ-இ)

## தினம் தெரியுமோ?

கிளிநொச்சியில நாட்டாமை மாதிரி கெத்தா இருந்தவர் இப்ப ஓடவும் முடியாமல் ஒளியவும் முடியாத 'பிக்பாஸ்' போட்டியாளர் மாதிரி, வீட்டுக் கட்சியை விட்டுப் போகவும் முடியாமல், சேர்ந்து நிக்கவும் முடியாமல் தடுமாறுறாராம். இப்பிடியொரு கிலிசை கெட்ட வேட்பாளர் பட்டியலை வைச்சுக்கொண்டு எந்த முகத்தோட அவர் சனத்திட்ட போய் வாக்குக் கேக்க முடியும்? வீடெண்டு போனால் சனம் விளக்கு மாத்தைத்தான் முதல்ல தூக்கப்போகுது. அதால அவரை வீட்டில இருந்து வெளியில வந்து எலக்சன் கேக்கச் சொல்லி, அவரின்ர ஆதரவாளர்மார் கடும் அழுத்தம் குடுக்கினமாம். ஆனால் தான் வெளியில வந்தால், அப்புக்காத்தரின்ர கையில கட்சி முழுசாச் சிக்கி சிதைஞ்சு போடுமெண்டதால 'கேட்டால் வீடு தான், கெட்டாலும் வீடுதான்' வீட்டை விட்டு வர மாட்டன் எண்டு நாட்டாமையார் அடம்பிடிக்கிறாராம்.

ஆனால் சிக்கல் என்னெண்டால், உவர் எலக்சனில வெண்டு எம்.பி.யா வந்தாலும் அப்புக்காத்துக் கொம்பனி அடங்கப்போறேலை. ஏற்கனவே அரியத்தாருக்கு எதுக்கு சப்போர்ட் பண்ணினீங்கள்? எண்டு விளக்கக் கடிதம் அனுப்பி போட்டினம். அதால எலக்சன் முடிய அதைவைச்சு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறமாதிரி நாட்டாமையாரை கட்சியை விட்டே தூக்கவும் ஐடியா போடுகினமாம். அதைவிட எலக்சனில பிரசாரம் செய்யேக்க, பப்ளிக்கா நாட்டாமையரின்ர பேரைச் சொல்லி அவருக்கு சேறு பூசுவன் எண்டும் அப்புக்காத்து சேர் தெரிவுக்குழுவில மேசையில அடிச்சு சொல்லியிருக்கிறார். நல்லகாலத்துக்கு இவ்வளவுநாளும் அப்புக்காத்தருக்கு காத்தடிக்கிற 'பம்ப்' மாதிரி திரிஞ்ச பதில் செயலாளர் 'அப்பிடி எங்கட கட்சிக்காரரையே தாக்கிப் பேசினால் ஆர் எவரெண்டு பாக்காமல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பன்' எண்டு அந்நியன் மாதிரி குரலை உயர்த்திச் சொல்ல, நாட்டாமையார் அவருக்கு கைகுடுத்து 'இப்பவாவது உங்களுக்கு ரோசம் வந்ததே' எண்டு சொல்லியிருக்கிறார். எண்டாலும் நாட்டாமையை பிரசாரத்தில போட்டுத் தாக்கிறதுதான் எண்டதில அப்புக்காத்துக் கொம்பனி உறுதியா நிக்குதாம்.

'பார் லைசென்ஸுக்கு' நாட்டாமையாரும் சிபார்சுக் கடிதம் குடுத்தவர் எண்டு அப்புக்காத்தார் தெரிவுக் குழுவில நெத்திக்கு நேர குற்றஞ்சாட்டி இருக்கிறார். அதுக்கு 'அப்பிடி ஏதும் பார் லைசென்ஸ் எடுத்தன் எண்டோ, சிபார்சுக் கடிதம் குடுத்தன் எண்டோ ஆதாரத்தோட நிரூபியுங்கோ. அப்பிடி நிரூபிச்சால் நான் எலக்சன் கேக்காமல் விலகிறன். ஒருவேளை வெண்டபிறகு அதுக்கு ஆதாரம் காட்டினால், அப்பவும் எம்.பி. பதவியில இருந்து விலகிறன். வேணுமெண்டால் வாங்கோ, ஒரு சத்தியக்கடுதாசி முடிச்சுத் தாறன்- எண்டு நாட்டாமையார் சவால் விட, அதுக்குப் பிறகு உந்த பார் லைசென்ஸ் கதையை அப்புக்காத்தரும், அவருக்கு ஆமாப் போடுற மட்டக்களப்பு மல்லியும் எடுக்கவேயில்லையாம்.

அதெல்லாம் சரி, எலக்சனில தோத்தவைக்கு சீற் குடுக்கிறேலை எண்டிட்டு, ஆர்னல்டுக்கு மட்டும் எப்பிடிக் குடுத்தவை எண்டு உங்களுக்கு கடும் குழப்பமாயிருக்கும். அதுக்கு அப்புக்காத்தரின்ர உருட்டையும், உப்பிடி சீற் குடுத்ததுக்கு பின்னால இருக்கிற சங்கதியையும் நாளைக்கு பாப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளுக்குச் சென்று வரி வசூலிப்புத் திட்டம்

*இறைவரித் திணைக்களம் நடைமுறை*

கொழும்பு, ஒக்.8

2023/2024 மதிப்பீட்டு ஆண்டில், இதுவரை வரி செலுத்தாதவர்களின் வீடுகளுக்குச் சென்று வரி வசூலிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் செபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிவரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆயிரத்து 417 பில்லியன் ரூபாவை வரியாக வசூலித்துள்ளது.

ஆயினும், சுயமதிப்பீட்டுக் கொடுப்பனவுகளின் கீழ் செலுத்த வேண்டிய வரி செலுத்துவோர் இன்னும் உள்ளனர் என்று இனங்காணப்பட்டுள்ளதால், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அவர்களின் வளாகங்களுக்குச் சென்று அவற்றை வசூலிக்கத் தீர்மானித்துள்ளது. செலுத்தப்படாத சுயமதிப்பீட்டு வரியை சட்ட நடைமுறைக்கு ஏற்ப உடனடியாக வசூலிக்க அந்தத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# யோகா கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக்.8

உலக சமாதான ஆலயத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகா பயிற்சி வகுப்புகள், இணுவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 5மணிக்கு ஆரம்பமாகவுள்து.

இந்தப் பயிற்சி வகுப்புகள் சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாள்களில் பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறவுள்ளன.

தொடர்ந்து நடைபெறவுள்ள பயிற்சி வகுப்புகளில், யோகாக்கலை பற்றிய விளக்கங்கள் கலாநிதி பா. சுதாகரன் தலைமையில் வழங்கப்படவுள்ளன. பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. சிறியவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம் எனவும், பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்கள் 0779603001, 0760233301 எனும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு, மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டது. (எ-ரி)

# கொடுப்பனவு

சாவகச்சேரி ஒக்.8

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் ஒக்ரோபர் மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்க் கொடுப்பனவு என்பன வழங்கப்பட்டு வருகின்றது என்றும், கொடுப்பனவை எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி-9)

# பருத்தித்துறை நகர்ப் பகுதியில் 12 உணவகங்களுக்குத் தண்டம்

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் நகர்ப் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. சுகாதார சீர்கேடுகளுடனும் மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 12 உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர்களுக்கு ஒரு இலட்சத்து 35ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-ரி-20)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.8

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமகாச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 26 தெல்லிப்பளை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.மணிக்கு இடம்பெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச. நவநீதன் "மாணிக்கவாசகரும் அதிசயப்பத்தும்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.8

நீர்வேலி வடக்கு காளி அம்பாள் தேவஸ்தான நவராத்திரி விழாக்குழு நடத்தும் பரிசளிப்பு நிகழ்வு நவராத்திரி விழாக்குழுத் தலைவர் சி. டிசாந்தன் தலைமையில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கலாதீபனும், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமாரும், விருந்தினராக ஆலயத்தின் தலைவர் இ.வதனமோகனும் கலத்து கொள்ளவுள்ளனர்.

வழிபாட்டைத் தொடர்ந்து விருந்தினர் கௌரவிப்பு, தலைமையுரை, விருந்தினர் உரை , கலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெறும் என்றும், இறுதி நிகழ்வாக மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை மறுப்பின்றி வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கன்னி:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக் கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் விஷயத்தில் சிந்தித்து ஈடுபடவும்.

**மீனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

# மில் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்

அரிசிக்கு செயற்கைத் தவிட்டுச் சாயம் கலந்த அரிசி ஆலை உரிமையாளருக்கு மல்லாகம் நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் சுதுமலையில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.ஜெயபிரதீப் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்ட போது, செயற்கை தவிட்டுச் சாயம் கலந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஒரு தொகை அரிசி மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட அரிசி மாதிரிகளை மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக அநுராதபுரத்திலுள்ள அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், பரிசோதனையில் அரிசியில் சாயம் கலக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணைகளை அடுத்து நீதிமன்றம் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (எ-45-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஆட்டம் காணும் வீடு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து பெருந்தலைகள் வெளியேறத் தலைப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட அதிருப்தி நிலைகள் 'உட்கட்சிப் பூசல்களைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் முகமாகவும் அடையாளமாகவும் அரணாகவும் இதுவரை இருந்த தலைமைகள் அந்தக் கட்சியைத் துறப்பதே இனி உசிதம் என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். தமிழரசுக் கட்சியின் பயணப் பாதை ஓர் அழிவின் முடிவை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதா? என்ற ஐயப்பாடுகளை அதன் அண்மைக்கால நிகழ்வுகள் வலுவாகவே தோற்றுவித்திருக்கின்றன என்றால், அதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

'தமிழரசு' என்பது தனியொரு நபரால் கட்டுப்படுத்தக் கூடிய அரசியல் கட்சியோ அல்லது ஒற்றைச் சிந்தனையின் பாற்பட்டுச் செயற்பட்ட செயற்படக்கூடிய தேர்தல் கூட்டோ அல்ல. இந்தப் பொதுப்புரிதலை அனைவரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியின் தோற்றமும் 'உருவாக்கமும்' பயணமும் தொலைநோக்குச் சிந்தனையும் தந்தை செல்வாவின் உத்வேகத்தில் இருந்து பீறிட்டுப் பாய்ந்த பெருநெருப்பு. அந்த நெருப்பு அன்று எவ்வளவு வீரியமாகப் பற்றவைக்கப்பட்டதோ அதை அப்படியே அணையாமல் இன்னும் பெரிதாக்கி உருவாக்கி அடுத்த தலைமுறையின் கைகளில் தவளவிட வேண்டியதுதான் தமிழ்த் தேசியவாதிகளின் தலையாய கடமை. இந்த வரலாற்றுக் கைங்கரியத்தை ஆற்றும்போது, அதில் எந்தவொரு தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கும் இடமில்லாமல் இயங்குபவன்தான் உண்மையான தேசியவாதி. அதுதான் நெறிபிறழாத் தேசியமும்கூட. இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது அது, பாலைவனத்தின் இஸ்ராயேலருக்குப் பசியாற்றிய' மன்னா' வாகவும், உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவையின் ஓர் உந்துசக்தியாகவும்தான் பார்க்கப்பட்டது. ஆனால் இன்றோ, தமிழரசு தமிழரசாக இல்லை. அதற்குள்ளும் ஏகப்பட்ட 'தனியரசுகள்' முளைத்துவிட்டன. கூட்டணிக் கட்சிகளை கொன்றுதின்ற காலம்போய், இன்று சொந்தக் கட்சிக்குள்ளேயே குத்துவெட்டுகள். வீடு, வீடாக இல்லை. கட்டடங்கள் ஆட்டம்காண ஆரம்பித்துவிட்டன. கூரைகள் கழன்று காற்றுடன் பறக்கலாயின. அந்த வீட்டுக்குள் இருந்த எந்தவொரு உணர்வும் இப்போதில்லை. தற்போது வெறும் கட்டடம் மட்டுமே. அந்தக் கட்டடத்தின் கதியும் இன்றோ நாளையோதான்.

கடந்த தேர்தலில் கட்சியின் முக்கியஸ்தராக இருந்த சசிகலாவுக்கு இம்முறை வாய்ப்பு மறுக்கப்பட்டது. தற்போது அவர் கட்சியைத் துறந்து சங்குச் சின்னத்துடன் சங்கமித்துள்ளார். வேடிக்கை என்னவென்றால், கடந்த தேர்தலில் பல ஆண்வேட்பாளர்களை விடவும் சசிகலா அதிகளவான வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் அவரை விட மிகக்குறைந்த வாக்குகளைப் பெற்ற ஆர்னோல்ட்டுக்கு மத்தியகுழுவின் முடிவையும்மீறி இடமளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் காடு மேடெல்லாம் பெண் வேட்பாளர்களைத் தேடித்திரிந்த தமிழரசு ஒருமுறை கூட வீட்டைத் திரும்பிப் பார்க்கவில்லை. கடந்த தேர்தலில் சசிகலா தோற்றிருக்கலாம். ஆனால், அந்தத் தோல்வியை விடவும் அவர் இந்த இனத்துக்காகக் கொண்ட அர்ப்பணிப்பு அர்த்தமற்றதா? என்று வினவ வேண்டியிருக்கின்றது. இப்படி எத்தனையோ எத்தனையோ கதைகள் தமிழரசுக்குள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சின்னம் மாறினால் எண்ணமும், எண்ணம் மாறினால் சின்னமும் மாறும். அதில் தவறில்லை. ஏனெனில் அதுவே நவயுக 'அரசியல் அறம்'. தேசியக் கட்சிகளின் பின்னால் இளைஞர்கள் ஈரக்கப்படும் நிலையில் தென்னிலங்கையில் மாற்றம் எனும் பெரும் சுனாமி வீசிக்கொண்டிருக்கையில் தமிழரசுக் கட்சிக்குள் இந்த விசப்பரீட்சையெல்லாம் தேவைதானா? ஒன்றுமட்டும் உண்மை, தோரிச் காம்புகள் ஒருபோதும் கொண்டாடப்படுவதில்லை.






# ராஜபக்சக்களுக்கு அரசியல் இல்லை

## ராஜித சேனாரத்ன கூறுகின்றார்



**கொழும்பு, ஒக்.8**
**ராஜபக்சக்களின் அரசியல் பயணம் இந்தத் தேர்தலுடன் முடிவடையக்கூடும். சிலவேளை தேசியப் பட்டியல் ஊடாக நாமல் ராஜபக்ச மட்டுமே நாடாளுமன்றம் தெரிவாகக் கூடும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது ராஜபக்சக்கள் செய்த தவறுகளால்தான் அரசியலில் இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தெரிந்ததால்தான் அந்த அணியில் இருந்து நான் முன்கூட்டியே வெளியேறி, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு பாடுபட்டேன். ஆனால் மைத்திரியும் தவறிழைத்துவிட்டார்.

இந்தமுறை தேர்தலில் ராஜபக்சக்கள் போட்டியிடமாட்டார்கள். அவ்வாறு போட்டியிட்டால்கூட மக்கள் நிராகரிப்பார்கள். சிலவேளை நாமல் ராஜபக்ச மாத்திரம் தொங்கி நாடாளுமன்றம் தெரிவாகக்கூடும் - என்றார். (எ-44)

# விளம்பரப்படுத்தலில் சஜித்துக்கு முதலிடம்

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே கூடுதலான பணத்தை விளம்பரங்களுக்கு செலவு செய்துள்ளார் என்று ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல்களுக்கான கற்கை நிலையப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். சஜித் பிரேமதாஸ 1.58 பில்லியன் ரூபாவை தேர்தல் விளம்பரத்துக்கு செலவு செய்துள்ளார்.

இதில் 1.41 பில்லியன் ரூபா தொலைக்காட்சி விளம்பரங்களுக்கும், 37.3 மில்லியன் ரூபா வானொலி விளம்பரங்களுக் கும், 113.8 மில்லியன் ரூபா பத்திரிகை விளம்பரங்களுக் கும் செலவு செய்துள்ளார்.

சஜித்துக்கு அடுத்ததாக டிலித் ஜெயவீர 838.8 மில்லியன் ரூபா செலவு செய்துள்ளார். இவர் 808.8 மில்லியன் ரூபா தொலைக்காட்சி விளம்பரங் களுக்கும், 24.33 மில்லியன் ரூபா பத்திரிகை விளம்பரங்களுக்கும், 5.67 மில்லியன் ரூபா வானொலி விளம்பரங்களுக்கும் செலவு செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 613.5 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 271.26 மில்லியன் ரூபா செலவு செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (எ-6)

# களமிறங்கும் வாரிசுகள்

கொழும்பு, ஒக்.8
ஜே.வி.பி.யின் ஸ்தாபகரான ரோஹண விஜேவீரவின் மகனான உவிந்து விஜேவீர, எதிர்வரும் பொதுத்தேர்தலில் களமிறங்கவுள்ளார். இரண்டாம் தலைமுறை எனும் அமைப்பின் தலைவரான இவர், குருணாகலை மாவட்டத்தில் போட்டியிடுவார் என தெரியவருகின்றது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹம் சிறிசேன, பொதுத்தேர்தலில் மௌபிம ஜனதாக் கட்சியில் பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரான லக்ஷ்மன் கிரியல்லவின் மகள், கண்டி மாவட்டத்தில் களமிறங்கவுள்ளார். லக்ஷ்மன் கிரியல்ல இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. (எ-44)

# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக்.8
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. மழை பெய்யும்போது தற்காலிகமாகப் பலத்த காற்று வீசும் என்றும், மின்னல் தாக்கங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## நாளை

09.10.2024
புதன்கிழமை - புரட்டாதி - 23
சுபநேரம் : 04.32- 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

## நாளொரு நல்வார்த்தை

கூட்டம் கூடுவது எளிதான காரியம்;
ஆனால் ஒன்றுபடுவதுதான் கடினம்;
உழைப்பும் தியாகமும் சேர்ந்தால் தான் இந்த ஒற்றுமை உணர்ச்சி பிறக்கும்.
-ரவீந்திரநாத் தாகூர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna, SriLanka
## Faculty of Graduate Studies.

**Calling for Expression of Interest (EOI) for Visiting Resource Persons Faculty of Graduate Studies, University of Jaffna**

1. **Master of Education Programme – Jaffna & Vavuniya Regional Centre**
2. **Postgraduate Diploma in Education – Vavuniya Regional Centre**

Applications are invited from the eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach the Master of Education Programme, Postgraduate Diploma in Education programme.

**Qualifications:**

1. A First or Second Class Honors degree in the relevant field.
   Or
   General /Special degree with Postgraduate Diploma in Education/Master of Education.
   And
2. Master of Philosophy (MPhil)/Doctor of Philosophy (PhD) degree in Education.
   And
3. Not less than five years of experience in one or more of the following:
   I. Teaching at University Level.
   II. Professional Experience in teaching for Postgraduate Studies.
   And
4. Book Publications in the relevant field.
5. Research publications in the relevant field.

Interested eminent scholars with the required qualifications are expected to send their **self-prepared application along with Curriculum Vitae (CV) and the certified copies of the Educational and Professional Qualifications** to the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna on or before **25.10.2024.**

**Note:-** Please specify your willingness for teaching of the course units for Master of Education and Postgraduate Diploma in Education separately in your order of preferences.

Please visit our websites (**www.jfn.ac.lk / www.grad.jfn.ac.lk**) regarding the **form annexure.**

**Contact us on 0212223608 for any clarifications.**

Registrar
07.10.2024

(cr.43371) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1978



மறைவு 05 . 10 . 2024

## தபேசன் வினோதா

புதுத்தோட்டம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி, மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட தபேசன் வினோதா கடந்த (05.10.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - வசந்தமலர் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அம்பிகாவதி தம்பதியரின் மருமகளும், தபேசன் (யா / அராலி இந்துக் கல்லூரியின் கல்விசாரா ஊழியர்) அவர்களின் மனைவியும், சரண்ஜா, சங்கவி, ஜதுர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முரளிதரன் (லண்டன்), விஜித்தா (நோர்வே), பாலதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்சினி, ஜெயசூரியன், சுசியந்தினி, தவாஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விபுலானந்தர் வீதி,**
**மாதகல்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS56391) N-1)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் சின்னத்துரை

கந்தரோடை மேற்கை பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்துரை அவர்கள் கடந்த 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வல்லிபுரம் - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கைலாயர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதியின் பாசமிகு கணவரும், காந்தரூபன் (லண்டன்), அமரர் பத்மரூபன், நிரஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதியழகன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), துஷிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மாதுளா, கயூரா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் வன்னியசிங்கம் (நடேசு), அமரர் ராசா, அமரர் ராசலக்சுமி, துரைர்ராஜா, தனபாலசிங்கம், திலகவதி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS1550A-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1950



மறைவு 06 . 10 . 2024

## தாமோதரம்பிள்ளை ஜெகசோதி

அன்னங்கை கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும் வற்றாப்பளை முள்ளிய வளையை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஜெகசோதி நேற்று முன்தினம் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-அழகம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா தாமோரம்பிள்ளையின் (ஓய்வு பெற்ற அதிபர்- கொக்குத்தொடுவாய் ம.வி), அருமை மனைவியும் சுதர்சன் (UK), சுதர்சினி (வற்றாப்பளை), சுகந்தன் (UK), சுகந்தினி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரியா, தயானந்தன், கனகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் பௌதிகன், அனோஸ், பருனியா, அமோலிக்கா, அருஷ், மிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மலர்சோதி (கனடா), பெருந்தவராசா (UK) மற்றும் அருமைதவராசா (ஜேர்மனி), இந்திராணி, தேவராணி, அன்னராணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், நாகரட்ணம், புவனேஸ்வரி மற்றும் தெய்வேந்திரம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2024) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் வற்றாப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**பிள்ளைகள்**

| | |
|---|---|
| சுகந்தன் | +44 753 542 2390 |
| சுகந்தினி | +16 13 413 9879 |
| சுதர்சினி | +94 77 887 7058 |
| சுதர்சன் | +44 782 575 1407 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1558) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரமைப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன், அடுத்த வாரமளவில் இரண்டாம் கட்டக் கடன் மறுசீரமைப்புப் பணிகளை பாகிஸ்தான் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## சமஸ்கிருத வகுப்புகள் ஆரம்பம்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் அந்தனர் மாணவர்களுக்கான சமஸ்கிருத வகுப்புகள் ஊரெழு ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் புதிய வகுப்புகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய மண்டபத்தில் (யாழ் போதனா மருத்துவ மனைக்கு முன்பாக) ஆரம்பமாக இருப்பதால் கற்க விரும்பும் மாணவர்களை 077 617 6752 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(CS/56399) J-1

செயலாளர்


## வவுனியா வடக்கு பிரதேச சபை,நெடுங்கேணி
## கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான மரக்கறி மொத்த கொள்வனவு நிலையங்களை 01/11/2024 தொடக்கம் 31/12/2025 வரையான காலப்பகுதிக்கு வாடகைக்கு வழங்குவதற்காக் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | கடை விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஒப்பந்த காலப்பகுதிக் கான இயந்திர உபகரண தேய்மான வைப்புப்பணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 01 | கனகராயன்குளம் மொத்த மரக்கறி கொள்வனவு நிலையம் | 2,000.00 | 10,000.00 | 100,000.00 | 4,500.00 |
| 02 | சம்பந்துவர மொத்த மரக்கறி கொள்வனவு நிலையம் | 2,000.00 | 10,000.00 | 100,000.00 | 4,500.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 2024.10.09 - 2024.10.24 பிற்பகல் 1.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 2024.10.24 பிற்பகல் 02.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் : 2024.10.24 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி நிபந்தனைகள்**

1. **கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.**
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு **"செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2024.10.24 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைகக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் **"தவறுனராகக்"** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் **தவறுனராக** அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஒரு கடைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் **திருவுளச்சீட்டு முறை** அடிப்படையில் கேள்விதாரர் தேர்வுசெய்யப்படுவார்.
6. வாடகைக்காலம் 01.11.2024 தொடக்கம் 31.12.2025 வரையான காலம் ஆகும்.
7. **கடைக்கான மாதவாடகையாக** 4500.00 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் வாடகைத் தொகை காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும்.
8. மரக்கறி மற்றும் பழங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான இயந்திரம் மற்றும் **உபகரணங்கள் எம்மால் வழங்கப்படும்.**
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
12. கேள்வி விண்ணப்பங்களை பெறுபவர் கேள்வி நிபந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை பெறுபவராக கருதப்பட்டு கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பட்சத்திலும், கேள்வியில் சித்திதர கேள்விதாரர் ஆனதன் பின்னர் ஒப்பந்தத்தினை மேற்கொள்ளாத பட்சத்திலும் கேள்வி வைப்புப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200, மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை.**

(cs.) (N-1)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஆண்டுகள் பதினைந்தாகியது
## அப்பாவைப் பிரிந்து



நிஜமாக 15.04.1949
நினைவாக 24.09.2009

## அமரர் கந்தசாமி தங்கராசா (பத்தர்)

திதி: பூர்வபக்க ஷஷ்டி
08.10.2024


உங்கள் பேருக்கு ஏத்தாற் போல்
தங்கமான குணமுள்ள அப்பாவே உங்கள்
அழகிய முகம் பார்த்தும் அமைதியான
பேச்சுக் கேட்டும் பதினைந்து வருடங்கள்
ஆகிவிட்டதே அப்பா! உங்கள் படத்தினை
பார்த்து நாங்கள் சிந்தும் கண்ணீர் உங்கள்
கண்களுக்குத் தெரியவில்லையா அப்பா
எப்ப எங்களிடம் திரும்பி வரப் போறீங்கள்
அப்பா! ஏக்கத்தோடு காத்திருக்கும்.

601, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 222 5762

(cs.56396) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 03 . 1974
மறைவு 06 . 10 . 2024

## சின்னத்துரை பாஸ்கரன்

(துபாலதிபர் - கொழும்பு)

26/6, ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி நல்லூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாஸ்கரன் நேற்றுமுன்தினம் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கண்ணுச்சாமி - இராசமணி தம்பதியரின் அன்பு மருமனும், இராசகனி அவர்களின் அன்புக் கணவரும், பிறின்சிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தரணிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/6, ஆசீர்வாதப்பர் வீதி,
கச்சேரி நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(cs.56384) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.
076 307 9132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானங்கள் ரத்து

இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதல் அச்சம் காரணமாக, ஈரான் தனது நூற்றுக்கும் மேற்பட்ட விமான சேவைகளை இன்று ரத்துச் செய்துள்ளது. (ம)

## பேக்கரி உணவுக்கு ஆசைப்பட்டு கம்பி எண்ணும் உத்தியோகத்தர்

கொழும்பு, ஒக். 8

பேக்கரி ஒன்றிலிருந்து பொய்யான தகவலை வழங்கி உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முற்பட்ட இறைவரித்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இறைவரித் திணைக்களத்தின் கண்டி கிளையில் பணி புரியும் உத்தியோகத்தர் ஒருவர் பேக்கரி ஒன்றுடன் தொடர்பு கொண்டு இறைவரித் திணைக்களத்தில் விருந்து ஒன்று நடைபெறுவதாகவும் அதற்கு சில உணவுப்பொருள்களை அனுப்புமாறும் உணவுப் பொருள்களுக்குரிய பணம் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார். பேக்கரி உரிமையாளர் இறைவரித்திணைக்கள கணக்காளருடன் தொடர்பு கொண்டு இறைவரித் திணைக்களத்தில் விருந்து ஏதாவது நடைபெறுகிறதா என விசாரித்துள்ளார். அதற்கு கணக்காளர் அப்படி எதுவும் நடைபெறவில்லையென தெரிவித்துள்ளார். அதையடுத்து பேக்கரி உரிமையாளரின் முறைப்பாட்டுக்கு அமைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஊழல் குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-6)

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபை நிதி (CF) 2024, முத்திரைத்தீர்வை -2023
## கேள்வி இல - IFB/2024/3

யாழ்ப்பாணம் மாநகரசபை பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

1. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை இல. 04/2016(i), 04/2016(ii) & 04/2016 (iii) என்பனவற்றிற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 221 6468, 021 222 2019)** என்னும் முகவரியிலிருந்து 08.10.2024 **ஆம் திகதியில் இருந்து** 21.10.2024 **ஆம் திகதி வரை** அலுவலக நாட்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் கீழ்க்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) **தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 22.10.2024 **ஆம் திகதி மு.ப.** 10:00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்
7. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
8. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் **15.10.2024 ஆம் திகதி மு.ப 10.30** மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வேலைத் தலங்களுக்கான களத்தரிசிப்பு இடம்பெறும்.
9. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி மூலம் | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் மற்றும் Speciality | மீளளிக்கப்படாத பணம் (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | | பாதுகாப்புப் பிணை தொகை (ரூபா.) | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/W/SD/ 2024-III/1 | Reconstruction of Aasariyar Road | 3.357 | SD | 63 | 23.12.2024 | 84 | C8 & C7 Highway | 3,500.00 + VAT | 51,000.00 | 20.01.2025 |
| 2 | JMC/W/SD/ 2024-III/ 2 | Improvement of Vithanaiyar Lane | 5.254 | SD | 77 | 06.01.2025 | 84 | C7 & C6 Highway | 3,500.00 + VAT | 79,000.00 | 03.02.2025 |
| 3 | JMC/W/CF/2024-III/Pac/3 | Reconstruction of Oodumadam Drainage Work, Construction of Chappel Street Drainage Work & Construction of Koddady Muthtamil 3rd By Lane Drainage Work - Stage II | 4.190 | CF | 63 | 23.12.2024 | 84 | C8 & C7 Irrigation | 3,500.00 + VAT | 63,000.00 | 20.01.2025 |
| 4 | JMC/W/CF/ 2024-II/RE/4 | Improvements to Nithiyaoli Cross Streets | 3.008 | CF | 63 | 23.12.2024 | 70 | C8 & C7 Highway | 3,500.00 + VAT | 46,000.00 | 20.01.2025 |
| 5 | JMC/W/CF/ 2024-II/RE/1 | Improvement to Annathaimadam Street | 1.525 | CF | 49 | 09.12.2024 | 42 | C9 & C8 Highway | 2,000.00 + VAT | 23,000.00 | 06.01.2025 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**
**08.10.2024**

(எ.) (N-1)

## நீர்கொழும்பில் வெள்ள இடர்!

கொழும்பு, ஒக். 8

நாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவுமுதல் பெய்துவரும் மழையால் பல இடங்களில் வெள்ள இடர் ஏற்பட்டுள்ளது. நீர்கொழும்பு நகரின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பெரியமுல்லை பிரதேசத்தில் தெனியாவத்த, இறப்பர்வத்த, கோமஸ் வத்த என்பன உட்பட தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும், அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## கூட்டுறவு தினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் 102ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும், கௌரவிப்பு நிகழ்வும் கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் யாழ் வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் திருமதி ச. பரமானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வடக்கு மாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான நடராஜா திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கிறகோரி சந்திரசேகரன், யாழ். தேசிய சேமிப்பு வங்கி இரண்டாவது கிளை முகாமையாளர் விபுதராஜா சிறப்பு விருந்தினர்களாகவும், கலந்துகொள்ளவுள்ளனர். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 02 . 1961



மறைவு
06 . 10 . 2024

### வயலட் கொன்சி அருளானந்தம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தற்போது 90, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயலட் கொன்சி அருளானந்தம் கடந்த 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் அந்தோனிப்பிள்ளை (ஐயா அண்ணே) -அந்தோனிப்பிள்ளை செபமாலை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மார்ஷல் - றோசலீன் தம்பதியரின் அன்பு மருமகளும், மார்ஷல் அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும், நிரோஷினி (பிரான்ஸ்), அன்ரன் ஜெறி நிரோஷன் (அவுஸ்திரேலியா), யூட் நிரன்ஜன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், டெனிஸ் (பிரான்ஸ்), தியணி பிறிஸ்கா (அவுஸ்திரேலியா), மேரி லாவண்யா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், டறின், ஜொயல், இசெபெலா, கபிரியல்லா, அதிஸ்ரா, அட்விக் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற ஜசிந்தா மகேந்திரம், லயனல் கொன்சற் றைன் (நெதர்லாந்து), காலஞ்சென்ற அன்ரன் மாகிறேட் லூசியா, நெல்சன் மேரி அஞ்சலினா (U.K), மரியசீலன் ஐடா காமலிற்றா (வவுனியா), ராஜ்குமார் மேரி ஜெனிற்றா (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான லோறன்ஸ், கிளிபேட், ஸ்ரெலா மற்றும் நெல்சன், புளோரா, கிப்பொலிட்டா மற்றும் ராஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் ஆலயத்தில் இன்று (08.10.2024) மதியம் 12.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி திருநகர் சேமக் காலையில் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :076 8947 922
077 2546 060

தகவல்:
குடும்பத்தினர்.

(CS1560) A-1

# குற்றவாளிகளை வேட்பாளராக்காதீர்

## பவ்ரல் கோரிக்கை

**கொழும்பு, ஒக்.8**

**நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டவர்களை நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களாக நியமிக்கவேண்டாம் என தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள் ளது.**

நீதிமன்றத்தால் ஊழல் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தண்டனை விதிக்கப்பட்டவர்களை வேட்பாளர்களாக அரசியல் கட்சிகள் நியமிக்கக் கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வோரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்தால் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் பொதுமக்களுக்கு பதில்சொல்ல வேண்டியிருக்கும். ஜனாதிபதித் தேர்தல் வன்முறையற்ற விதத்தில் இடம்பெற்றுள்ள சூழ்நிலையில் அரசியல் கட்சிகளை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தகுதியானவர்களை அரசியல்கட்சிகள் தெரிவு செய்யவேண்டும்.


பட்டியலில் ஒரு வேண்டத்தகாத வேட்பாளர் நியமிக்கப் பட்டாலும் அது ஒட்டுமொத்த கட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். விரும்பத்தகாத அரசியல்வாதிகள் மீண்டும் தெரிவு செய்யப்படுவதை தவிர்க்கும் விதத்தில் மக்கள் வாக்களிக்கவேண்டும்-என்றார். (எ-இ)

# நாட்டுக்கு அனுப்பப்பட்ட பாகிஸ்தானியர்

இலங்கைச் சிறைகளில் சிறைவாசம் அனுபவித்து வந்த பாகிஸ்தான் பிரஜைகள் 56 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாடகை விமானம் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களை திருப்பியனுப்பும் செலவை பாகிஸ்தான் அமைச்சர் அப்துல் அலீம் கான் தனது சொந்தச்செலவாக ஏற்றுக்கொண்டார். இவர்கள் 2020ஆம் ஆண்டு ஐஸ் போதைப்பொருளை இலங்கைக்குள் கடல் மார்க்கமாக எடுத்து வந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பத்து வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டவர்களாவர். (எ-6)

## மரண அறிவித்தல்

மலர்வு
10 . 06 . 1952



உதிர்வு
06 . 10 . 2024

### திரு. சிவகுரு பரமேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற தபாலதிபர் -புத்தளம், மருதானை, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை)**

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.சி.பரமேஸ்வரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சிவகுரு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், புனிதம்மாவின் அன்புக் கணவரும், லக்ஷ்மன் (அவுஸ்திரேலியா), ஜதூஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மினியின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமனாரும் தனபாக்கியவதி (அமெரிக்கா), பங்கையச்செல்வி, விக்னேஸ்வரன் (சுவிற்சர்லாந்து), கெங்கேஸ்வரன் (பிரான்ஸ்), புனிதவதி (பிரான்ஸ்), மகேஷ்வரன் (லண்டன்), சற்குணேஸ்வரன் (ஆசிரியர் -யாழ்ப்பாணம்), துசிமலா (கனடா), ஹேமலா (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.10.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (09.10.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று மு.ப. 10.30 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - 077 760 7827

(CS/29037) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 07 . 1945



மறைவு
07 . 10 . 2024

### தங்கராசா திலகவதி

ஆசிரியர் வீதி, சாங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா திலகவதி நேற்று (07.10.2024) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (சாத்திரி) - தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மகளும் உசன், மிருசுவிலை சேர்ந்த காலஞ்சென்ற கந்தர்-சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் தங்கராசா அவர்களின் மனைவியும் பரநீசன் (லண்டன்), சதீஸ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வ.மா). தர்சிகா (கனடா) ஆகியோரின் அருமைத்தாயாரும் திபியா (பிரதேச செயலகம்-கரைச்சி). அகிலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அக்ஷன், அஸ்மிகா, அபிஷன், ஆரிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, தில்லையம்மா, கயிலாயபிள்ளை, சரஸ்வதி, அன்னப்பிள்ளை, வடிவேலு ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சுப்பிரமணியம், சிவகுரு, பரமேஸ்வரன், குலசிங்கம் மற்றும் நாகபூரணி, பரமேஸ்வரி சோமாஸ்கந்தர், சோதீஸ்வரி, செல்வராசா, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2024) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்.
077 297 3589

(CS 1558) V-1

# மரநடுகை

யாழ்.தென்மராட்சி இன்பக்கரம் அறக்கட்டளை ஊடாக வரணி இயற்றாலையில் அமைந்துள்ள கலைவாணி முன்பள் ளியை அழகுபடுத்துதலும், மரம்நடுகை நிகழ்வு முகாமைத்துவக் குழுத் தலைவர் இ.நிறஞ்சன் தலைமையில் முன்பள்ளி யில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ச -22,20)

# சிவசக்தி ஆனந்தனும் போட்டியிலிருந்து விலகல்

வவுனியா, ஒக். 8

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சங்குச் சின்னத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். களமிறங்குகின்றது. அதன் வன்னி மாவட்ட வேட்பாளராக சிவசக்தி ஆனந்தன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இளையோருக்கு இடமளிக்கும் வகையில் ஒதுங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கணிதக் கண்காட்சி!

கிளிநொச்சி, ஒக். 8

கிளி.முழங்காவில் மகா வித்தியாலய தரம் - 6,7,8,9 மாணவர்களின் கணிதக் கண்காட்சி அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் பாடசாலையின் கணித ஆய்வு கூடத்தில் இடம்பெற்றது. கணித எண்ணக்கருக்களை வெளிக்காட்டும் மாணவர்களின் ஆக்கங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலக கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெ.வாசுதீசன் கலந்து கொண்டார். (ச-22,159)

## சோதிவேம்படி மாணவி சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.8

தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டியில் பாவோதலில் மானிப்பாய் சோதிவேம்படி மாணவி தா.மகதி தேசியத்தில் முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (ச-45-555)



## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பொறியியல் இளமாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதாவது தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களை யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில். எனும் முகவரியூடாகவும். மற்றும் 021222 3374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கமுடியும் என பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ரி)



ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு முன்பள்ளிப் பொறுப்பாசிரியர் திருமதி காண்டீபன் தவச்செல்வி தலைமையில் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏழாலை புனித இசிதோர் ஆலயப் பங்குத் தந்தை வணபிதா றே.றெனால்ட், சிறப்பு விருந்தினராக நலன்விரும்பி திருமதி பியூட்டி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,66)




முழங்காவில் மகா வித்தியாலய சிறுவர் தின நிகழ்வு அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் கடந்த 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிள்ளைகளைப் பாதுகாப்போம், சமமாக மதிப்போம் என்ற கருப்பொருளின் கீழ் சிறுவர் தின உரைகள் மற்றும் கவிதை என்பன இடம் பெற்றன.

மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகத்தால் அன்பளிப்பு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ச-22,159)



மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் ஆங்கில எழுத்துப் போட்டியில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி மாணவி சதுனா சதீஸ்குமார் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். மாணவி கல்லூரிச் சமூகத்தினரால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டார். (ச-13)



## டெங்குத் தடுப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாவட்டத்தில் டெங்குநோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி சமன் பத்திரண, யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், பிரதேசசபையின் செயலாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-66-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒலிம்பியாட் போட்டி

## டினேசன் வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக்.8
சீனாவில் நடைபெற்ற சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் தரம் 6 மாணவன் க. டினேசன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். (அ-ஒ-இ)

# அறிவாளிகளை நியமியுங்கள் ஜனாதிபதிக்கு வேண்டுகோள்!

கொழும்பு, ஒக்.8
வெளிநாட்டுத் தூதுவர்கள், ஆளுநர்கள் மற்றும் உயர்பதவிகளுக்கு கல்வித்தகைமையுடன் கூடிய அறிவாளிகளை நியமியுங்கள் என அநுராதபுர ருவான் வெலிசாய பிரதமகுரு மாகுளுவே விமல நாயக்க தேரர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அநுராதபுர ருவான் வெலிசாய பிரதமகுரு மாகுளுவே விமல நாயக்க தேரரை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேரரின் கோரிக்கைக்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி, தனது இலட்சியம் அது தான் எனக் கூறியுள்ளார். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றுங்கள் எனவும் அந்தச் சந்தர்ப்பத்தில் தேரர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். (ரி-6 )

## உலக...

கத்தின் நிதி அமைச்சின் செயலர் கே.எம்.மஹிந்த சிறிவர்த்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமூக நிலைக்குக் கொண்டு வருவதற்கான அபிவிருத்திக் கொள்கைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

இந்த இரு வருட வேலைத்திட்டம், வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான தாக்கத்தை குறைத்து முழுமையான பொருளாதார நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படுகிறது. இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன், பிரதான மூன்று துறைகளின் கீழ் ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்ளமுடியும்.

அதன்படி இந்த வேலைத்திட்டத்தின் பிரதான மூன்று அம்சங்களாக, பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தல், வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தல், வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாத்தல் ஆகியன அமைந்துள்ளன.

உரிய நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெற வேண்டுமெனில், அரசாங்கத்தால் மேற்குறிபிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் 9 வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்படவேண்டிய அதேநேரம், அதற்கு உகந்த பொருளாதாரக் கொள்கை வரைவொன்றை பேணிச் செல்லவேண்டியதும் அவசியமாகும்.

அதன்படி இந்த நிதி வசதியின் இரண்டாம் கட்டத்தை பெற்றுக்கொடுப்பதற்காகவும், உலக வங்கிச் சபையின் அனுமதி கிட்டியுள்ளதோடு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அது நடைமுறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## வடக்கின்...

கடோனோவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி கடோனோ தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது. அதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதேபோல் இலங்கையில் வலுசக்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்தத் தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித்துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## கட்டுமரம்...

மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினார்கள். (அ-ம-100)

## வீதி...

இந்துக் கல்லூரியின் 75 ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்தவர். பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான அவர், வடக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் பணியாற்றியுள்ளார்.

இந்த நிலையில் அவர் நேற்றையதினம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## சங்குச்...

புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான தர்மலிங்கம் சித்ததார்த்தனின் கந்தரோடை இல்லத்தில் வைத்துச் சசிகலா ரவிராஜ் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் நேற்றுக் கையொப்பமிட்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவருக்கு இம்முறை தமிழரசுக் கட்சி ஆசனம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-20)

## தமிழரசின்...

நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில், தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களின் பட்டியல் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் தெரிவு தொடர்பான அதிருப்தியைத் தொடர்ந்தே அவர் கட்சியின் உறுப்புரிமையைத் தவிர்த்து ஏனைய அத்தனை பொறுப்புகளில் இருந்தும் விலகவுள்ளதாக நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகும் முடிவை கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ள அவர், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற அடிப்படையில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு சிறீதரனிடம் கோரியுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இது தொடர்பான உறுதிப்படுத்தல்களுக்காக மாவை சேனாதிராஜாவுக்கும், தமிழரசுக் கட்சியின் செயலாளருக்கும் நேற்று மாலை அழைப்பெடுத்தபோது அவர்களைத் தொடர்புகொள்ள முடியவில்லை. (அ-ம-26-110)

## பிரதேச...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான வழக்கமான வாராந்தக் கலந்துரையாடல் நேற்று மாலை 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றுக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் திடீர் மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மின் பிறப்பாக்கியை இயக்குவதற்காக உத்தியோகத்தர் சென்ற போதே மாநாட்டு மண்டபத்தின் வெளிப் பகுதியில் மின் இணைப்புப் பொருத்தப்பட்ட இடத்தில் தீ பற்றி எரிந்துள்ளதைக் கண்டுள்ளார். இதையடுத்து விரைந்து செயற்பட்ட உத்தியோகத்தர்கள் உடனடியாகத் தீயைக் கட்டுப்படுத்தினார்கள்.

இது தொடர்பில் இலங்கை மின்சாரசபை பிராந்திய அலுவலகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு வருகைதந்து மின் ஒழுக்கின் காரணமாக தீப்பற்றி எரிந்து சிதைவடைந்த மின் வயர்களை அகற்றி மின் இணைப்பைச் சீர்செய்தனர். (அ-ஒ-100)

## சி.ஐ.டி...

அதிகாரியே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளார்.

இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் அதிகாரி என்ற பெருமைக்குரிய அவர், தற்போது பணிப்பாளர் பதவிக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையானது முக்கியத்துவம் மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி அநுரவின் ஆட்சிக்காலத்தில் அரச நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாகவே இந்த முன்மொழிவும் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-சி)

## பண மோசடியில்...

விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி மரண விசாரணை அதிகாரியை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். ஒரு தொகைப் பணத்தைத் திரும்ப வழங்கியதைத் தொடர்ந்து அவரைப் பிணையில் நீதிமன்றம் விடுவித்தது. (அ-ம-26)

## தாமரைக்...

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவியின் பையிலிருந்து பாடசாலை காலணிகள் மீட்கப்பட்டுள்ளன. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-சி)

## இலஞ்ச...

மன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
V2 Travels
0768226244

'தர்மமுழக்கம்'

# கிண்ணத்தைத் தனதாக்கியது தருமபுரம் மத்திய கல்லூரி

**கிளிநொச்சி, ஒக்.8**

**'தர்மமுழக்கம்' என்று அழைக்கப்படும் கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய பாடசாலைகளுக்கிடையிலான 7வது தர்மமுழக்கம் துடுப்பாட்டத் தொடரில் 170 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முழங்காவில் மகா வித்தியாலய அணியை வீழ்த்தி தர்மபுரம் மத்திய கல்லூரி கிண்ணத்தைத் தனதாக்கியுள்ளது.**

நேற்றுமுன்தினமும் நேற்றும் தருமபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

தர்மபுரம் மத்திய கல்லூரி அணி முதலாவது இனிங்சில் 126 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 170 ஓட்டங்களையும் பெற்றது.

முழங்காவில் மகா வித்தியாலய அணியினர் முதலாவது இனிங்சில் 52ஓட்டங்களைப்பெற்று இரண்டாவது இனிங்சில் 52.02 பந்துப் பரிமாற்றங்களில் 74 ஓட்டங்கள் மட்டுமே பெற்ற நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது. 170 ஓட்டங்களால் தருமபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றிவாகை சூடியது. போட்டியின் ஆட்டநாயகனாக தருமபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தமிழ்வாணனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக தருமபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே. ரொபின்சன், சிறந்த பந்து வீச்சாளராக தருமபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த வை. டிசாந்தன், சிறந்த களத்தடுப்பாளராக தருமபுரம் மத்திய கல்லூரி அணி எஸ். துசாந் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-113)




## ஆரோக்கிய சைக்கிள் பவனி

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, வடக்கு மாகாணச் சுகாதாரத் திணைக்களம் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியன இணைந்து உலக இருதய தினத்தை முன்னிட்டு நடத்திய 15 கிலோ மீற்றரை உள்ளடக்கிய உடல் ஆரோக்கிய துவிச்சக்கர வண்டிப் பவனி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த சைக்கிள் பவனி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதி வழியாக இருபாலைச் சந்தி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில் உப்புமடம் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக தாவடி, கொக்குவில், யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி ஊடாக மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைச் சென்றடைந்தது. (ச-66)

## சுற்றுலாத்துறை வருவாய் உயர்வு

கொழும்பு, ஒக். 8

சுற்றுலாத்துறையின் மூலம் இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானம் இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துக்குள் 181 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. இலங்கை மத்தியவங்கியின் கூற்றுப் படி, இந்த வருவாய் கடந்த 2023 ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் ஈட்டிய வருமானம் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் கிடைத்த 1.46 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 61.2% அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (ச-இ)

வேலையாட்கள் தேவை
கோப்பாய் சந்தியில் அமைந்துள்ள
சைவ உணவகம் ஒன்றிற்கு
வேலையாளட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்
விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 413 3714

காணி விற்பனைக்கு உண்டு
யாழ் மல்லாகம் பழைய நீதிமன்ற
வீதி K.K.S Road ல் 4 பரப்பு
காணி விற்பனைக்கு உண்டு
➤ நன்னீர் ஊற்று
➤ குடியிருப்பு சூழல்
பார்வையிடும் நேரம்
காலை 7.00 முதல்
மாலை 5.00 மணி வரை
தொடர்புகளுக்கு:
077 638 5683
076 755 8606

காணி விற்பனைக்கு
யாழ்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு செல்லத்துரை வீதி முகப்புடன்
➤ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
➤ உரும்பிராய் சந்தி 750m தூரம்
➤ உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
➤ நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
➤ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ 20 அடி பாதையுடன்
பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை
தொடர்புகளுக்கு:
077 288 0152, 076 739 0413

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை
மல்லாகம் கொக்குவில்
புதிய தரம் 06 தமிழ்மொழி மூல ஆங்கிலமொழி வகுப்புக்கள் ஆரம்பம்
12.10.2024 [சனிக்கிழமை]
விஜயதசமி நன்னாளில்
நேரம்
மாலை - 3.02 முதல் 4.32 வரை
(ஆரம்பிக்கும் நாள் முதல் ஜனவரி 16 வரை
இலவசமாக வகுப்புக்கள் நடைபெறும்.)
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.